

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம (7.6.2025) முகாம் அலுவலகத்தில், கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர் கான் பக்ரீத் திருநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.6.2025) முகாம் அலுவலகத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளர் அழகிரி சதாசிவம் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## தேனி மாவட்டம் - ‘மகளிர் விடியல் பயணம்’ திட்டம்:

# முதலமைச்சருக்கு மகளிர் நெஞ்சார்ந்த நன்றி !

**சென்னை, ஜூன் 9- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை, எளிய அடித்தட்டு மக்களின் வாழ்வில் முன்னேற்றம் காணும் வகையில் எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.**

குறிப்பாக பெண்களின் வளர்ச்சிதான் நாட்டின் உண்மையான வளர்ச்சி என்பதை கருத்தில் கொண்டு பெண்கள் சுயமாகவும், சுதந்திரமாகவும் செயல்படும் வகையிலும், அவர்களின் வளர்ச்சி, முன்னேற்றம், பாதுகாப்பு, ஆகியவற்றினை உறுதி செய்யும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், இலவச பேருந்து பயண திட்டம், பெண்களின் உயர்கல்வியை ஊக்கப்படுத்தும் புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.



தனலெட்சுமி

பெண்கள் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால் அவர்களும் தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்க வேண்டும், தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையிலே அமர வேண்டும். படிப்பதற்கு மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்கள் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விடியல் பயணத் திட்டத்தின் மூலம் ஏராளமான பெண்கள் பயன்பெற்று வருகிறார்கள். பிறரை எதிர்பாராமல் தங்கள் வேலைகளை சுயமாக செய்து கொள்கிறார்கள்.



அதனடிப்படையில், கடந்த 4 ஆண்டுகளில் தேனி மாவட்டத்தில் விடியல் பயணத் திட்டத்தில் இதுவரை 32.18 கோடி மகளிர் கட்டணமில்லாமல் பயணங்கள் மேற்கொண்டு பயன் பெற்றுள்ளனர். 14.53 இலட்சம் எண்ணிக்கையிலான மகளிர்கள் கட்டண மில்லாமல் மலைவழித்தட பேருந்து பயணங்கள் மேற்கொண்டு பயனடைந்துள்ளனர். 2.22 இலட்சம் திருநங்கைகள் மற்றும் 22.33 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணங்கள் மேற்கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

மேலும், 82 புதிய புறநகர் பேருந்துகள், 13 புதிய நகரப் பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்ற பயனாளிகள் தெரிவித்ததாவது.**

**தனலெட்சுமி:** நான் குடும்பத் தலைவியாக உள்ளேன். முன்பெல்லாம் வீட்டிற்குத் தேவையான பொருட்கள் வாங்குவது மற்றும் பிற தேவைகளுக்கு வெளியில் செல்வது போன்ற வேலைகளை எனது கணவரே செய்வார்.

ஆனால், மகளிருக்கான இலவச பேருந்து பயணத்திட்டம் தொடங்கியதிலிருந்து எனது கணவரை எதிர்பார்க்காமல் அனைத்து வேலைகளையும் நானே செய்து கொள்கிறேன். இதனால் என் கணவரின் வேலைச்சுமையும்குறைக்கப்பட்டுள்ளது.

எங்களைப்போன்ற ஏழை எளிய மக்களின் நலனுக்காக இத்தகைய சிறப்பான தொரு திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.



ஜோதி

**ஜோதி:** நான் தேனி மாவட்டம் தாழிச்சேரி பகுதியில் வசிக்கிறேன். நான் தற்பொழுது நர்சிங் பயின்று வருகிறேன். தினசரி எங்கள் வீட்டிலிருந்து கல்லூரிக்கு இலவச பேருந்து மூலம் பயணம் செய்கின்றேன். மகளிர் விடியல் பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் என்னைப்போன்று கல்லூரி பயிலும் மாணவிகளின் பேருந்து கட்டணத்திற்கான சுமை குறைக்கப் பட்டுள்ளது. மேலும், நாங்கள் இலவசமாக பயணம் செய்வதால் பேருந்து கட்டணத்திற்கான தொகையை சேமித்து, எங்களின் பிற தேவையை நிறைவேற்றி கொள்ள முடிகிறது. இதுபோன்று சிறப்பான தொரு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.



ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து நான்கு புதிய பேருந்துகளின் இயக்கத்தை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், மாநகரக் கழகச் செயலாளர் ம.சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் தனலட்சுமி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் ஈரோடு மாவட்ட பொதுச் செயலாளர் சிவக்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



முத்தமிழ்றிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா, சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் ஊஞ்சப்பாளையம் செம்மேடு குட்டை பகுதியில் 500க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடும் நிகழ்வினை கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார் துவக்கி வைத்தனர். மேலும் சூலூர் ஒன்றியம், ஊஞ்சபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகத்தை திறந்து வைத்தனர். இதில் சூலூர் காவல் ஆய்வாளர் லெனின் அப்பாதுரை, சூலூர் ஒன்றிய பொறுப்பாளர்கள் அன்பரசு மேற்கு, சிபி செந்தில் குமார் வடக்கு, கணியூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் வேலுச்சாமி உள்பட கழக நிர்வாகிகள், ஆசிரிய பெருமக்கள், மாணவச் செல்வங்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.